2. அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(ஆ) தமிழ்நாடு, 1972-ம் ஆண்டு கட்டடங்கள் (குத்தகை-வாடகைக் கட்டுப்பாடு) திருத்தச் சட்ட முன்வடிவு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு.

தமிழ்நாடு, 1972-ம்ஆண்டு கட்டடங்கள் (குத்தகை-வாடகைக் கட்டுப்பாடு) திருத்த சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முனவடிவு எண் 29/72)ஐ ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளுவதற்கு ஆளுநர் அவர்கள் தம் இசைவைத் தெரிவித்திருக்கிறார்கள்.

4. அரசினர் சட்ட முடிவுகள்—தொடர்ச்சி.

(உ) தமிழ்நாடு 1972-ம் ஆண்டு கட்டடங்கள் (குத்தகை-வாடகைக் கட்டுப்பாடு) திருத்த சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 29/72).

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1972-ம் ஆண்டு கட்டடங்கள் (குத்தகை-வாடகைக் கட்டுப்பாடு) திருத்த சட்ட முன்வடிவு* (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 29/72) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டுமென்று கோருகிறேன்.

இந்தத் திருத்த மசோதா மிகச் சாதாரணமான ஒன்றாகும். மூலச் சட்டத்தின் கால வரம்பு செப்டம்பர் திங்கள் 30-ல் முடிவடைகிறது. அந்தக் கால வரம்பை இன்னும் 9 திங்கள் நீட்டுவதற்காகவே இந்தத் திருத்த மசோதா பேரவையின் முன் வைக்கப்பட்டிருக்கிறது. கடந்த ஆண்டு நடந்த கூட்டத் தொடரில் மூலச் சட்டத்தின் கால வரம்பை ஒரு ஆண்டுக்கு நீட்டுவதற்காக வந்த திருத்த மசோதாவின்போதே மாண்புமிகு அங்கத்தினர்கள் இப்படி அடிக்கடி கால வரம்பைக் குறுகிய காலத்துக்கு நீட்டுவது கூடாது என்றும் மூலச் சட்டத்துக்கு விரிவான திருத்தம் தேவை என்ற கருத்தும் தெரிவிக்கப்பட்டது.

உள்துறை செயலாளர் தலைமையின் கீழ் அரசு அமைத்த குழுவின் அறிக்கையை அரசு ஆய்ந்து அதன் கருத்துரைகளை சில மாற்றங்களுடன் ஏற்று அதற்கான விரிவான விளக்கமான திருத்த மசோதா பேரவையின் முன்பு நேற்றைய தினம் அறிமுகம் செய்யப்பட்டிருக்கிறது.

---

* 10-8-1972 தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பட்டுள்ளது.